மாண்புமிகு பேரவை தலைவர் ** : — என்று சொன்னது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப் பெறுகிறது.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : அநியாயம் என்பதை நாங்கள் அறிவோம். ஆனால் திருவள்ளுவர் போக்குவரத்து நிலையங்களிலே வசூலிப்பது அநியாயம் இல்லை. எதற்காக வசூலிக்கிறோம் என்பதைப் பார்க்க வேண்டும். அந்தப் பேருந்துகளிலே பயணம் செய்கிறவர்கள் மாத்திரம் வர வேண்டும், ஆனால் அந்த அந்த நகரங்களிலே இருக்கின்ற வெளியார்களும் அங்கே வருகிறார்கள். அதைக் கட்டுப்படுத்துவதற்கும் சுத்தமாக அவைகளை வைத்துக் கொள்வதற்கும் இதை நாம் வசூலிக்கிறோம். பல பயணிகள் எங்களிடம் சொல்கிறார்கள், கட்டணத்தை உயர்த்தினாலும் பரவாயில்லை, சுத்தமாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். அதனால் தான் செய்யப்படுகிறது. (**) போல் என்று சொன்னது வேண்டாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களும் நம்முடைய தொழிலாளர்கள் தான்.

மாண்புமிகு பேரவை தலைவர் : இப்போது அமைச்சர் அவர்கள் சொன்ன (**) என்பதும் நீக்கப்படுகிறது.

திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : தலைவர் அவர்களே, பேருந்துகளிலே பயணம் செய்கிறவர்களைத் தவிர வெளியார்கள் வருகிறார்கள், அவர்களைத் தடுப்பதற்காக செய்யப்படுகிறது என்று சொன்னார்கள். பேருந்துகளிலே பயணம் செய்கிறவர்கள் தங்கள் டிக்கட்டுகளைக் காண்பித்தால் அனுமதிக்கக் கூடிய முறையிலே ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு க. முத்துசாமி : பயணம் செய்கிறவர்கள் தான் டிக்கட் வைத்திருப்பார்கள். பயணம் செய்வதற்காகப் போகிறவர்கள் என்ன வைத்திருப்பார்கள் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். எனவே அதையும் யோசித்துப் பார்க்க வேண்டும்.

காஞ்சீபுரம் கன்னியாகுமரி பேருந்துப் பணி

*வினா எண். 138—திரு. ப. வெங்கட்டசுப்பிரமணியம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) காஞ்சீபுரம் - கன்னியாகுமரி வழித் தடத்தில் பேருந்துகள் விட அரசு அனுமதித்துள்ளதா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப் பெற்றது.

1981 செப்டம்பர் 1]

(ஆ) ஆம் எனில், எத்தனை பேருந்துகள் விடப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) இத்தடத்தில் 15—4—1981 முதல் விரைவுப் பேருந்துகளை திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் இயக்கி வருகிறது.

(ஆ) இரண்டு பேருந்துகள்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : பேரவைத் தலைவரவர்களே, தற்போது அந்த வழித்தடத்திலே பொது மக்கள் அதிகமாகப் பிரயாணம் செய்வதால் கூடுதல் பேருந்துகளை விட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, 15—4—1981 முதல் இரண்டு பேருந்துகளைத் துவக்கியிருக்கிறோம். அதற்குள்ளாக இன்னும் வேண்டுமென்று உறுப்பினரவர்கள் கேட்கிறார்கள். மீண்டும் பரிசீலனை செய்து முடிந்தால் நடவடிக்கை எடுக்கலாம்.

நகரப் பேருந்துகளுக்கு இரண்டு நடத்துனர்களை நியமிக்கும் திட்டம்.

*வினா எண். 153—திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போக்குவரத்துக் கழகங்களால் நடத்தப் பெறும் நகர பேருந்துகளுக்கு (டவுன் பஸ்) இரண்டு நடத்துனர்களை நியமிக்கும் (உத்தேசிக்கும்) திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நடைமுறைப் படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) மற்றும் (ஆ) அண்ணா, கட்டபொம்மன், பல்லவன் போக்குவரத்துக் கழகங் (மாவட்டப் பிரிவு)களைத் தவிர, மற்ற போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படும் நகரத் பேருந்துகளில் நெரிசல் நேரங்களில் சில குறிப்பிட்ட வழிப்